RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி

MALAI THANTHI

DAILY EVENING

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 124 | மே.11 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “கஜானா காலி... அவகாசம் தேவை, வெள்ளை அறிக்கை வெளியிடுவேன்!” முதல்வர் விஜய் முதல் உரை

சென்னை: மே.11-

“தமிழக அரசுக்கு இன்று ரூ.10 லட்சம் கோடிக்கும் மேல் கடன் உள்ளது. அரசின் கஜானாவை சுத்தமாக துடைத்து வழித்து வைத்து விட்டு சென்றுள்ளார்கள். தூக்க முடியாத சுமையை ஏற்றி வைத்துவிட்டு சென்றுள்ளார். அந்த நிலையில்தான் இந்த பொறுப்பை ஏற்றுள்ளேன். உள்ளே போய் பார்த்துவிட்டு, தற்போதைய தமிழக அரசு இப்போது என்ன நிலையில் உள்ளது என்பதை ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிடுவேன்” என தமிழக முதல்வர் விஜய் தெரிவித்தார்.

பதவியேற்பு விழாவை தொடர்ந்து 3 முக்கிய கோப்புகளில் கையொப்பமிட்ட பின்னர் உரையாற்றிய முதல்வர் விஜய், “சினிமாவில் ஒரு சாதாரண உதவி இயக்குநரின் மகன் தான் நான். எனக்கு வாழ்க்கையில் வறுமை, பசி என்றால் என்னவென்று தெரியும். நான் மன்னர் பரம்பரையில் இருந்து வந்தவன் அல்ல. நான் உங்கள் குடும்பத்தில் ஒருவன் தான். நீங்களும் என்னை அப்படி நினைத்ததால் தான், என்னை வெற்றி பெறவைத்துள்ளீர்கள்.

இந்த பயணத்தில் எனக்கு பல அவமானங்கள் நடந்தது, அதுபோல உங்களுக்கும் நடந்தது. ஆனால் என்கூடவே நின்றீர்கள். நான் ஒன்றும் தேவதூதன் கிடையாது. ஒரு இயல்பான வாழ்க்கை வாழும் மனிதன் தான். சாத்தியமற்ற வாக்குறுதிகளை கொடுத்து ஏமாற்ற மாட்டேன். எது சாத்தியமோ அந்த வாக்குறுதிகளையே நான் சொல்வேன்.

இத்தனை கோடி மக்கள் என் கூட இருக்கும்போது என்ன வந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை உள்ளது. தமிழக அரசுக்கு இன்று ரூ.10 லட்சம் கோடிக்கும் மேல் கடன் உள்ளது. அரசின் கஜானாவை சுத்தமாக துடைத்து வழித்து வைத்து விட்டு சென்றுள்ளார்கள். தூக்க முடியாத சுமையை ஏற்றி வைத்துவிட்டு சென்றுள்ளார். அந்த நிலையில்தான் இந்த பொறுப்பை ஏற்றுள்ளேன். உள்ளே போய் பார்த்தால் தான்



என்ன இருக்கிறது, என்ன இல்லை எனத் தெரியும். உள்ளே போய் பார்த்துவிட்டு, தற்போதைய தமிழக அரசு இப்போது என்ன நிலையில் உள்ளது என்பதை ஒரு வெள்ளை அறிக்கையாக வெளியிடுவேன்.

நான் யாரையும் மறைமுகமாக, முகத்தை மூடிக்கொண்டு சந்திக்க மாட்டேன். எல்லாவற்றையும் வெளிப்படையாக செய்வேன். அதே நேரத்தில் எனது வாக்குறுதிகளை நிறைவேற்ற நீங்கள் எனக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவேன். பெண்களுக்கான பாதுகாப்பை கண்டிப்பாக உறுதி செய்வேன், போதைப்பொருள் கலாச்சாரத்தை ஒழிக்க நடவடிக்கை எடுப்பேன், நமது பசங்களை காப்பாற்ற வேண்டியது நம் பொறுப்பு. சட்டம் ஒழுங்கை கண்டிப்பாக உறுதி செய்வேன். என்னை அவமானப்படுத்தியவர்களுக்கும், 8 கோடி மக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவேன்.

கல்வி, மருத்துவம், குடிநீர், சாலை, ரேஷன் போன்ற அடிப்படை பிரச்சினைகளில் முழு முதல் கவனம் செலுத்துவேன். நான் மக்கள் பணத்திலிருந்து ஒரு ரூபாய் கூட எடுக்க மாட்டேன். எனக்கு அந்த அவசியம் இல்லை. அதுபோல நான் யாரையும் தப்பு செய்யவும் விட மாட்டேன். எனது அரசில் யாரும் தவறு செய்ய விடமாட்டேன். ஜெயித்துவிட்டோம் என ஒரு ஆட்டம் ஆடிப்பார்க்கலாம் என்ற எண்ணம் இருந்தால், அதனை உடனே மறந்துவிடுங்கள். என் அரசில் ஒரே அதிகார மையம்தான், அது நான் தான். பல அதிகார மையங்கள் இங்கே கிடையாது. பெண்கள், விவசாயிகள் உட்பட அனைத்து மக்களும் நம் அரசின் நன்றாக இருப்போம். சிறுபான்மையினருக்காக நமது அரசு எப்போதும் துணை நிற்கும். இந்து, முஸ்லிம், கிறித்துவர்களுக்கான முகம் தான் இந்த விஜய்யின் முகம்.

முக்கியமாக இந்த விஜய் மாமாவின் குட்டி நண்பா, நண்பிகளுக்கு நன்றி. அவர்களால் தான் இந்த விஷயம் நடந்துள்ளது. அவர்களின் எதிர்காலத்துக்காக திட்டங்களை நிறைவேற்றுவேன். தவெக தோழர்களுக்கு நன்றி. வாருங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்குவோம்.

மக்கள் நலனை மட்டுமே பிரதானமாக கொண்ட நம் அரசுக்கு ஆதரவு வழங்கிய காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தி, வேணுகோபால், பிரவீன் சக்கரவர்த்தி, சிபிஎம் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி, பெ.சண்முகம், விசிக தலைவர் திருமாவளவன், ரவிக்குமார், வன்னியரசு, சிபிஐ தேசிய செயலாளர் டி.ராஜா, மாநில பொதுச் செயலாளர் வீரபாண்டியன், ஐயுஎம்எல் காதர் மொய்தீன், நவாஸ் கனி அனைவருக்கும் நன்றி. நம்பிக்கையோடு இருங்கள். நல்லதே நடக்கும்” என்றார்.

## “தமிழக அரசுடன் இணைந்து பணியாற்றுவோம்” பிரதமர் மோடி வாழ்த்து; முதல்வர் விஜய் நன்றி

சென்னை: மே.11-

தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள ஜோசப் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு தமிழக அரசுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றும் என கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘தமிழ்நாடு முதல்வராக பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய்க்கு வாழ்த்துகள். அவரது பதவிக்காலம் சிறப்பானதாக அமைய நல்வாழ்த்துகள். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த மத்திய அரசு தமிழ்நாடு அரசுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றும்’ எனத் தெரிவித்துள்ளார்.



பிரதமர் மோடியின் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்துள்ள முதல்வர் விஜய், ‘முதல்வராக நான் பொறுப்பேற்றதையொட்டி, தனது கனிவான வாழ்த்துகளைத் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடிக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மக்களின் நலனும் முன்னேற்றமுமே எங்களின் ஒரே குறிக்கோளாகும். தமிழ்நாட்டின் தொடர் வளர்ச்சிக்கு, ஒன்றிய அரசின் முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்’ எனத் தெரிவித்துள்ளார்

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை நடந்த நிகழ்ச்சியில், தமிழகத்தின் முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

முதல்வர் விஜய்யுடன் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி.அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ் மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இன்று நடந்த பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி கலந்துகொண்டார். அவர் விழா மேடையில் விஜய்யின் அருகில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்தார்.


## ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்ட 9 அமைச்சர்கள் பதவியேற்பு

சென்னை: மே.11-

முதல்வர் விஜய்யுடன் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, செங்கோட்டையன் உள்ளிட்ட 9 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று காலை 10 மணியளவில் வந்தே மாதரம் பாடல் இசைக்க பதவியேற்பு விழா தொடங்கியது. பின்னர் தேசிய கீதம் பாடப்பட்டது, 3வதாகவே தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டது.

இதனையடுத்து தமிழகத்தின் 18வது முதல்வராக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சி.ஜோசப் விஜய் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு



ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

விஜய்யை தொடர்ந்து 9 அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டனர். தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி.அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், வெங்கடரமணன், நிர்மல்குமார், ராஜ்மோகன், டி.கே.பிரபு, கீர்த்தனா உள்ளிட்டோருக்கு ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்புக்குப் பிறகு அமைச்சர்கள் அனைவருக்கும் முதல்வர் விஜய் கைக்குலுக்கி வாழ்த்து தெரிவித்தார்.

பதவியேற்றுக் கொண்ட அமைச்சர்களுக்கான இலாக்கா ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பு இன்று மாலை வெளியாகும் என்று தெரிகிறது.

## 3 அமைச்சர்கள், தற்காலிக சபாநாயகர்: விஜய் அமைச்சரவையில் தென்மாவட்டத்துக்கு முக்கியத்துவம்!

மதுரை: மே.11-

தவெக அமைச்சரவையின் முதல் பட்டியலில் தென்மாவட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதமாக 3 அமைச்சர்கள், தற்காலிக துணை சபாநாயகர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கட்சி தொடங்கிய 2 ஆண்டுகளில் முதல் தேர்தலிலேயே 234 தொகுதிகளிலும் தவெக தனித்து களமிறங்கியது. திமுக, அதிமுக கட்சிகள் பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. இதில், தவெக கட்சி தலைவர் விஜய் போட்டியிட்ட திருச்சி கிழக்கு, பெரம்பூர் உள்ளிட்ட 108 தொகுதிகளில் தவெக வெற்றி கண்டது.

ஆட்சியமைக்க பெரும்பான்மை இல்லாத நிலையில், காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகள், விசிக, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு அளித்துள்ளன. இதன்



மூலம் 120 எண்ணிக்கையை பெற்று தமிழக முதல்வராக விஜய் இன்று பதவி ஏற்றார். அவருக்கு தமிழக ஆளுநர் அர்லேக்கர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

முதல்வருடன் செங்கோட்டையன், புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உட்பட 9 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றனர். விஜய்யின் முதல் அமைச்சரவை பட்டியலில் தென்மாவட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருக்கிறது.

மதுரை திருப்பரங்குன்றத்தில் வெற்றி பெற்ற நிர்மல்குமார், காரைக்குடி தொகுதியில் சீமானை தோல்வி அடைய செய்த மருத்துவர் டி.கே. பிரபு, சிவகாசியில் வென்ற கீர்த்தனா ஆகியோருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல சோழவந்தான் தொகுதியில் வெற்றி பெற்ற கருப்பையாவுக்கு தற்காலிக சபாநாயகர் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தவெக நிர்வாகிகள் கூறுகையில், “தென்மாவட்டங்களிலுள்ள 51 சட்டப்பேரவை தொகுதிகளில் 25 இடங்களில் வெற்றி பெற்றுள்ளோம். பல்வேறு தொகுதிகளில் இரண்டாமிடத்திலும் வந்துள்ளோம். தென் மண்டலத்தில் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளுக்கு இணையாக வென்றுள்ளதால் தென் மண்டலத்திற்கு எங்களது அமைச்சரவையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு முதல் பட்டியலிலேயே 3 அமைச்சர்கள் மற்றும் தற்காலிக சபாநாயகர் பதவி ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை விரிவாக்கத்திலும் தென்மாவட்டத்தில் மேலும், ஓரிருவருக்கு அமைச்சர் பதவி கிடைக்கும் என நம்புகிறோம். மதுரை மத்தி, கிழக்கு தொகுதியில் இரு திமுக அமைச்சர்களை தோற்கடித்தவர்களில் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்க வாய்ப்புள்ளது ’ என்றனர்.

## 200 யூனிட் இலவச மின்சாரம் யாருக்கெல்லாம் பலன்?

சென்னை: மே.11-

தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள தவெக தலைவர் விஜய், தனது முதல் அரசாணையாக 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் கோப்பில் கையெழுத்திட்டுள்ளார்.



இந்த அறிவிப்பு, தமிழகத்தின் ஏழை எளிய குடும்பங்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ள அதே வேளையில், அதன் நடைமுறை நுணுக்கங்கள் குறித்த விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தினால் அதிகம் பலனடையப் போவது மாதத்திற்கு 200 யூனிட்டுகளுக்கும் குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் எளிய குடும்பங்கள் தான். இதுவரை 100 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் ஒவ்வொரு யூனிட்டுக்கும் கட்டணம் செலுத்தி வந்தவர்கள், இனி 200 யூனிட் வரை பயன்படுத்தினால் ஒரு ரூபாய் கூட மின் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

ஒரு எளிய குடும்பத்தின் வீட்டில் இரண்டு மின்விசிறிகள், ஒரு தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் சில விளக்குகள் மட்டுமே பயன்படுத்துபவர்களுக்கு, (200 யூனிட்களுக்குள் பயன்படுத்தினால்) மின்கட்டணம் பூஜ்ஜியமாக மட்டுமே வரும்.

இன்னொரு புறம், முந்தைய நடைமுறையின்படி, 500 யூனிட்களுக்கு மேல் பயன்படுத்தினாலும் 100 யூனிட் இலவச மின்சாரம் என்ற சலுகை அனைவருக்கும் கிடைத்துவந்தது. ஆனால் தற்போது மின் பயன்பாடு 500 யூனிட்டைக் கடந்துவிட்டால் (உதாரணமாக 505 யூனிட் என்று வைத்துக் கொண்டால்), இந்த 200 யூனிட் இலவசம் கிடைக்காது.

அதுமட்டுமின்றி, பழைய முறையில் கிடைத்து வந்த 100 யூனிட் இலவசமும் கிடைக்க வாய்ப்பில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது, 500 யூனிட்டைக் கடப்பவர்கள், பயன்படுத்திய மொத்த யூனிட்டுகளுக்கும் முழு கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

200 முதல் 500 யூனிட்டுகளுக்குள் பயன்படுத்துபவர்களுக்கு, இந்தத் திட்டம் பழைய முறையை விடக் கூடுதல் லாபத்தைத் தரும். சிக்கனமாக மின்சாரம் பயன்படுத்தும் எளிய மக்களுக்கு இந்த திட்டம் பலன் தரக்கூடியதாக இருக்கும்.

ஆனால், தற்போது நடுத்தரக் குடும்பங்களிலேயே வீட்டுக்கு இரண்டு ஏசி இருக்கிறது. கோடைக்காலங்களில் கடும் வெப்பம் காரணமாக இந்த இரண்டு ஏசிகளும் தொடர்ந்து ஓடிக் கொண்டிருப்பதை தவிர்க்க முடியவில்லை.

அதே போல தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட போது, ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதம் 200 யூனிட் இலவச மின்சாரம் என்று விஜய் தெரிவித்தார். ஆனால் தற்போது இரண்டு மாதங்களுக்கு, அதுவும் 500 யூனிட்களுக்குள் பயன்படுத்தினால் மட்டுமே 200 யூனிட் இலவசம் என்று அறிவிக்கப்பட்டிருப்பது ஏமாற்றத்தை அளிப்பதாக ஒரு தரப்பினர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

ஒவ்வொரு மாதமும் அனைவருக்கும் 200 யூனிட் இலவசம் வழங்கினால், அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ.12,000 கோடி கூடுதல் செலவாகும். ஏற்கனவே நஷ்டத்தில் இருக்கும் மின்சார வாரியத்தைப் பாதுகாக்கவே, இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட் என்ற உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

500 யூனிட்களுக்குள் பயன்படுத்தினால் 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் அதே வேளையில், 500 யூனிட்களை கடந்தால் பழைய முறைப்படி 100 யூனிட் இலவச மின்சாரம் ரத்தாகாமல் தொடர வேண்டும் என்பதே நடுத்தர மக்களின் கோரிக்கையாக உள்ளது.

## சென்னை.பிட்காயினில் முதலீடு செய்வதாக ரூ.10.89 லட்சம் மோசடி



சென்னை:.மே.11-

பிட்காயினில் முதலீடு செய்தால் லாபம் தருவதாக ஆசை வார்த்தை கூறி, தனியார் நிறுவன மேலாளரிடம் ரூ.10.89 லட்சம் மோசடி செய்த நபர் மீது கோட்டூர்புரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சென்னை கோட்டூர் மண்ணப்பா தெருவை சேர்ந்தவர் சசிகுமார் (41), பிட்காயினில் முதலீடு செய்வதாக கூறி தன்னிடம் ரூ.10.89 லட்சத்தை பெற்றுக்கொண்டு ஒருவர் ஏமாற்றி விட்டதாக சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் புகார் ஒன்றை அளித்தார்.

அதில், "கடந்த ஆண்டு அடையாறில் உள்ள தனியார் திரு மண தகவல் மையத்தில் அசோசியேட் மேலாளராக தான் பணியாற்றிய போது அங்கிருந்த ரிலேஷன் ஷிப் மேனேஜரான கூடுவாஞ்சேரியை சேர்ந்த விக்னேஷ் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது.14 தவணைகளாக..: விக்னேஷ் தான் 'யுவிசி' என்ற பிட்காயினில் முதலீடு செய்து மாதம் ரூ.2 லட்சம் வரை லாபம் ஈட்டுவதாகவும், சசிகுமார் ரூ.1 லட்சம் முதலீடு செய்தால் மாதம் ரூ.20 ஆயிரம் லாபம் பெற்று தருவதாக ஆசை வார்த்தை கூறினார். இதை நம்பி, கடந்த 2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மனைவியின் நகைகளை வங்கியில் அடமானம் வைத்தும், தனிநபர் கடன் மூலமாகவும், மருத்துவச் செலவுக்காக சேமித்து வைத்திருந்த பணம் என மொத்தம் ரூ.10.89 லட்சத்தை 14 தவணைகளாக விக்னேஷிடம் வழங்கினேன். ஆனால், பணத்தை பெற்றுக்கொண்ட விக்னேஷ் கூறியபடி லாப தொகையை தராமல் காலம் தாழ்த்தி வந்தார். இதனால் சந்தேக மடைந்து, விக்னேஷ் வசிக்கும் கூடுவாஞ்சேரி பகுதிக்கு சென்று நேரில் விசாரித்த போது, அவர் பிட்காயினில் எந்த முதலீடும் செய்யவில்லை என்பதும். இதேபோல் பலரிடம் ரூ.40 லட்சம் ரூபாய் வரை மோசடி செய்திருப்பதும் தெரியவந்தது.கொலை மிரட்டல்: இது குறித்து கேட்டபோது விக்னேஷ் கொலை மிரட்டல் விடுத்தார். அவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்து எனது பணத்தை மீட்டுத்தர வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து சசிகுமார் அளித்த புகாரின் அடிப்படையில், கோட்டூர்புரம் குற்றப் பிரிவுகாவல் ஆய்வாளர் கற்பகம் தலைமையிலான போலீஸார், விக்னேஷ் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகிறது: தமிழகத்தில் 12ம் தேதி முதல் கனமழை தீவிரமடையும்



சென்னை:மே.11-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தென்கிழக்கு அரபிக் கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய கேரள கடல் பகுதிகளுக்கு அப்பால் உள்ள லட்சத்தீவு பகுதிகளின் மேல் சுமார் 1.5 கி.மீ. உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.மேலும், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி சுமார் 5.8 கி.மீ உயரம் வரை நிலவுகிறது. இதன் காரணமாக தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் 11ம் தேதி ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும்.

மரத்வாடா முதல், கடலோர கர்நாடகா, வட உள் கர்நாடகா மற்றும் மத்திய மகாராஷ்டிரா வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதன் காரணமாக இன்று (மே 10) தென் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 11, 12ம் தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 13ம் தேதி வட தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 14, 15ம்தேதிகளில் பெரும்பாலான இடங்களிலும் இடி, மின்னல், பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். ராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் இன்றும், நாளையும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும். நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை,மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் 12ம் தேதியும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர், மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் 13ம் தேதியும் இடி மின்னலுடன் கனமழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று முதல் 13ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை குறையக்கூடும்.

நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 75 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 17 செ.மீ, நாலுமுக்கில் 16 செ.மீ, காக்காச்சியில் 14 செ.மீ, மாஞ்சோலையில் 11 செ.மீ, தென்காசி மாவட்டம் ஆய்க்குடியில் 9 செ.மீ, தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் 9 செ.மீ, தென்காசி மாவட்டம் கருப்பாநதி அணை, தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம், தென்காசி மாவட்டம் செங்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் தலா 7 செ.மீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சென்னையில் 445 கிலோ குட்கா பறிமுதல் ஆட்டோவில் கடத்தி விநியோகம்

சென்னை:மே.11-

சென்னையில் ஆட்டோவில் குட்கா கடத்தி விநியோகித்து வந்த நபரை கைது செய்த போலீஸார், அவரிடம் இருந்த 445.5 கிலோ குட்கா புகையிலை பாக்கெட்டுகளை பறிமுதல் செய்தனர். சென்னை காவல் ஆணையரின் உத்தரவின் பேரில், மாநகரம் முழுவதும் போதைப் பொருட்களுக்கு எதிரான தீவிர கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, சூளைமேடு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர், அரும் பாக்கம் மெட்ரோ ரயில் நிலையம் அருகே நேற்று முன்தினம் தீவிர வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அந்த வழியாக வந்த ஆட்டோ ஒன்றை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி போலீஸார் சோதனை செய்தனர். அப்போது, ஆட்டோவில் இருந்த மூட்டைகளில் குட்கா புகையிலை பாக்கெட்டுகள் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, ஆட்டோவை ஓட்டி வந்த கொடுங்கையூர் எம்ஜிஆர் நகரைச் சேர்ந்த வெற்றிவேல் (45) என்பவரை போலீஸார் கைது செய்தனர்.அவரிடம் நடத்திய விசாரணையில், தலைமறைவாக உள்ள சில நபர்களின் அறிவுறுத்தலின் பேரில், அரும்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையம் அருகே நிறுத்தப்பட்டிருந்த இலகுரக சரக்கு வாகனத்தில் (மினி லாரி) இருந்து குட்கா மூட்டைகளை ஆட்டோவுக்கு மாற்றி, நகரின் வேறு பகுதிக்கு விநியோகம் செய்ய முயன்றது தெரிய வந்தது.

பின்னர், அங்கு சென்று அந்த சரக்கு வாகனத்தையும், அதிலிருந்த குட்கா புகையிலை பாக்கெட்டுகள் அடங்கிய மூட்டைகளையும் போலீஸார் பறிமுதல் செய்தனர். இந்த சோதனையில்,மொத்தம் 445.5 கிலோ குட்கா பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், நடைபெற்ற விசாரணையில் பிடிபட்ட வெற்றிவேல் மீது ஏற்கனவே திருவல்லிக்கேணி காவல் நிலையத்தில் குட்கா கடத்தல் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது தெரிய வந்தது. இந்த கடத்தல் சம்பவத்தில் பின்னணியில் உள்ள முக்கிய நபர் களையும் போலீஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

## தோட்டகலைப் பயிர்களை வெப்ப அலையில் இருந்து பாதுகாத்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் வேண்டுகோள்




தேனி .மே.11-

தேனி மாவட்டத்தில் மா, எலுமிச்சை, கொய்யா, திராட்சை, தென்னை, ஏலக்காய், டீ, காபி, முந்திரி உள்ளிட்ட பல்லாண்டு தோட்டக்கலை பயிர்கள் சுமார் 50,000 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. வாழை, பப்பாளி, தக்காளி, சின்ன வெங்காயம், மிளகாய், வெண்டை போன்ற குறுகியகால தோட்டக்கலைப் பயிர்கள் சுமார் 15,000 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்நிலையில் நடப்பாண்டில் எல்நினோ நிகழ்வினால், காலநிலையில் இந்த ஆண்டு அதிக அளவு மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனை எதிர்கொள்ளும் வகையில் கீழ்க்காணும் முன்னெச்சரிக்கை மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

I) பழத்தோட்டங்கள் மற்றும் பல்லாண்டுப் பயிர்கள்பூ மற்றும் காய் பிடிக்கும் நிலையிலுள்ள பழப்பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்திட முன்னுரிமை அளிக்க வேண்டும். உயர் மதிப்பு கொண்ட பழப்பயிர்களுக்கு தண்ணீர் நெளித்தல் (தெளிப்பு நீர்ப் பாசனம்) மூலம் வெப்பத் தாக்கத்தை குறைக்கலாம்.

a) மீள்திறன் நடவடிக்கைகள்

வெப்பத்தைத் தாங்கக்கூடிய பயிர் இரகங்களையும், குறுகிய கால சாகுபடி இரகங்களையும் ஊக்குவிக்க வேண்டும். பயிர்களின் பூ (ம) காய் பிடிக்கும் பருவங்கள் அதிக வெப்பத்தினால் பாதிக்காத வண்ணம் விதைப்புத் தேதியை மாற்றி விதைக்க வேண்டும். வேளாண் காடுகள் வளர்ப்பதன் மூலம் வயல்களுக்கு நிழல் மற்றும் காற்றுத் தடுப்புகளை உருவாக்கி வெப்ப அலைகளிலிருந்து பாதுகாக்க வேண்டும். பிரதிபலிக்கும் கூரைகள் (ம) 3070 % நிழல் தாக்கூடிய நிழல் அமைப்புகள் ஆகியவற்றைக் கொண்டு கால்நடைக் கொட்டகைகளை மேம்படுத்த வேண்டும்.

II. பயிர் வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் 1. தக்காளிபூ உதிர்தலைக் கட்டுப்படுத்தவும், காய் பிடிப்பை மேம்படுத்தவும். நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு. பயிர்முழுமையாகப் பூக்கும் நிலையில் டிரையாகோன்டனால் @ 1.25 ppm செறிவுள்ள (500 விட்டர் தண்ணீரில் 625 IL) கரைசலை இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும். பூ உதிர்தலைக் கட்டுப்படுத்தவும். காய் பிடிப்பை மேம்படுத்தவும். நாற்று நட்ட 40 நாட்களுக்குப் பிறகு, 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை 0.6% துத்தநாக சல்பேட் (ZnSO-1) கரைசலை இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும். மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்க, 25 மைக்ரான் தடிமன் கொண்ட கருப்பு LDPE தாள்களைக் கொண்டு மூடாக்கு இடவேண்டும்.2. வெண்டை

மகசூலை அதிகரிக்க, நடவு செய்து 30 மற்றும் 45 நாட்களுக்குப் பிறகு

1% யூரியா + 1% MOP இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும். கலப்பின வெண்டைப் பயிர்களாக இருப்பின். மகசூலை அதிகரிக்க. நடவு செய்த 30 நாட்களுக்குப் பிறகு 10 நாட்கள் இடைவெளியில் 0.5% 0.5% தழை, மணி, சாம்பல் சத்துக்களை (19:19:19) இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும்.3.கத்தரிபூ மற்றும் காய் பிடிப்பை அதிகரிக்க, நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு, செடி முழுமையாகப் பூக்கும்போதும், டிரையாகோன்டனால் @ 2 ppm மற்றும் சோடியம் போரேட் அல்லது போராக்ஸ் (1 லிட்டர் தண்ணீரில் 35 I.A) ஆகியவற்றை இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும். மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்க, 25 மைக்ரான் தடிமன் கொண்ட கருப்பு LDPE தாள்களைக் கொண்டு மூடாக்கு இடவேண்டும்.4.மிளகாய்

பூ மற்றும் காய் பிடிப்பை அதிகரிக்க. 1% பொட்டாசியம் சல்பேட்டை இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும். காய்பிடிப்பை அதிகரிக்க. நாற்று நட்ட 60 மற்றும் 90 நாட்களுக்குப் பிறகு 10 ppm செறிவுள்ள நாஃப்தலின் அசிட்டிக் அமிலம் (NAA) இலைவழித் தெளிப்பாகத் தெரிக்க வேண்டும். பூ மற்றும் காய்ப் பிடிப்பை அதிகரிக்க, நாற்று நட்ட 20, 40, 60 மற்றும் 80வது நாட்களில் டிரையாகோன்டனால் @ 1.25 IL / லிட்டர்ஜ இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும்.5. மா

வெப்பமான மற்றும் வறண்ட காலங்களில் பாசனநீரை இலைவழியாகத் தெளிக்க வேண்டும். பிப்ரவரி முதல் மே மாதம் வரை வெப்பக்காற்றிலிருந்து பழத்தோட்டத்தைப் பாதுகாக்க காற்றுத் தடுப்புகளைப் பயன்படுத்த வேண்டும். பயிரைப் புத்துணர்ச்சியூட்ட, 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை 0.5% தழை, மணி, சாம்பல் சத்துக்களை (19:19:19) + 0.5% பெர்ரஸ் சல்பெட் (FeSO4) + 0.25% துத்தநாக சல்பேட் (ZnSO4) + 0.3% போராக்ஸ் கலந்த கரைசலை இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும்.

காய்ப்பிடிப்பை அதிகரிக்கவும், பழங்கள் உதிர்வினைக் குறைக்கவும், கடுகு அளவு காய் பருவத்தில் 2% பொட்டாசியம் நட்ரேட் (ரிழிளி3)ஐ இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும். பழங்கள் உதிர்வினைக் குறைக்க 20 ppm செறிவுள்ள நாஃப்தலின் அசிட்டிக் அமிலம் (NAA)ஐ பூ பூக்கும் பருவத்தில் இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும். 6. வாழை35 அல்லது 55 நாட்கள் ஆன வாழைக்குலைகளைக் கொண்ட வாழைப்பயிர்களில், ஒரு நாள் விட்டு ஒரு நாள், 50 ppm செறிவுள்ள ஜிபெரில்லிக் அமிலத்தை (GA3) மூன்று முறை இலைவழிக தெளிப்பதன் மூலம், இளம் மற்றும் முதிர்ந்த வாழைக்குலைகள் இரண்டிலும் உள்ள பழங்களின் எடையையும் கன அளவையும் அதிகரிக்கலாம்.

வாழையின் மகசூலையும் தரத்தையும் அதிகரிக்க, 3, 5 மற்றும் 7 வது மாதங்களில்

0.5% துத்தநாக சல்பேட் (ZnSO4) + 0.2% பெர்ரஸ் சல்பெட் (FeSO4)+0.2% காப்பர் சல்பேட் CuSO4 + 0.1% (H3BO3) கலந்த கரைசலை இலைவழித் தெளிப்பாகத் தெளிக்க வேண்டும்.7. சம்பங்கி மற்றும் மல்லிகைபூ மகசூலை அதிகரிக்க, முளைக்கிழங்குகளை 5,000 ppm செறிவுள்ள சைகோசல் (CCC) கரைசலில் நனைக்கவும். 0.5% துத்தநாக சல்பேட் (ZnSO4) + 0.2% பெர்ரஸ் சல்பெட் (FeSO4)+0.1% போரிக் அமிலம் கலந்த கரைசலை இலைவழித் தெளிக்கவும்.நடவு செய்த 40, 55 மற்றும் 60 நாட்களுக்குப் பிறகு, 50100 ppm செறிவுள்ள ஜிபெரில்லிக் அமிலம் (GA3)ஐ மூன்று முறை இலைவழித் தெளிக்கவும். மல்லிகையில், முன்பருவ பூ உற்பத்தியை அதிகரிக்க 1,000 ppm செறிவுள்ள சைகோசல் (CCC) கரைசலை இலைவழித் தெளிக்கவும். மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றி தோட்டகலைப் பயிர்களை வெப்ப அலையில் இருந்து பாதுகாத்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.

## தற்காலிக சபாநாயகராக கருப்பையா பதவியேற்பு




சென்னை:மே.11-

தமிழ்நாடு சட்டப்பேரவையின் தற்காலிக சபாநாயகராக சோழவந்தான் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கருப்பையா ஆளுநர் மாளிகையில் பதவியேற்றுக்கொண்டார்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய் தலைமையிலான தவெக 108 தொகுதிகளில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. காங்கிரஸ், சிபிஐ, சிபிஎம், விசிக, ஐயுஎம்எல் ஆகிய கட்சிகள் ஆதரவு அளித்ததை அடுத்து, விஜய்க்கு பெரும்பான்மை பலம் கிடைத்தது. இதையடுத்து இன்று அவர் முதல்வராக பதவியேற்றார்.சென்னை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், ஆளுநர் ராஜேந்திர அர்லேகர் அவருக்கு பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். அவரோடு, ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, செங்கோட்டையன் உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர். இதையடுத்து, தலைமைச் செயலகம் வந்த முதல்வர் விஜய், தனது அலுவலகப் பணிகளைத் தொடங்கினார். பின்னர், பெரியார் திடலுக்குச் சென்ற முதல்வர் விஜய், பெரியார் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணியைச் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இதன் தொடர்ச்சியாக ஆளுநர் மாளிகைக்கு வருகை தந்த விஜய், தற்காலிக சபாநாயகர் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டார். அவருடன் அமைச்சர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஆளுநர் ராஜேந்திர அர்லேகர், கருப்பையாவுக்கு தற்காலிக சபாநாயகராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தொடர்ந்து அவருக்கு ஆளுநர் வாழ்த்து தெரிவித்தார்.நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற எம்எல்ஏக்கள் பதவியேற்பு விழா நாளை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது. தற்காலிக சபாநாயகர் கருப்பையா, உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்க இருக்கிறார்.சோழவந்தான் தனித்தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரான கருப்பையா, 201116ல் அதிமுக எம்.எல்.ஏ ஆக இருந்தவர். நடந்து முடிந்த தேர்தலில் அதிமுகவில் வாய்ப்பு மறுக்கப்பட்டதால் தவெகவில் இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார்.வரும் 12ம் தேதி சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்தல் நடைபெற உள்ளது. இதன் தொடர்ச்சியாக வரும் 13ம் தேதி, சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பை முதல்வர் விஜய் கோர உள்ளார்.

## ஹார்முஸ் ஜலசந்தி அருகே படகு தீப்பற்றியதில் இந்திய மாலுமி உயிரிழப்பு

டெஹ்ரான்:மே.11-

ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் சரக்குகளை ஏற்றிச் சென்ற ஒரு மரப் படகில் நேற்று முன்தினம் தீ விபத்து ஏற்பட்டு கடலில் கவிழ்ந்துள்ளது.அந்தப் படகில் 18 இந்திய மாலுமிகள் இருந்தனர். இந்த விபத்தில் இந்தியர் ஒருவர் உயிரிழந்தார். காயம் அடைந்த 4 பேர் துபாய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 17 மாலுமிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

துபாயில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்ட இந்தியர்களை சந்தித்து நலம் விசாரித்ததாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. படகு உரிமையாளருடன் தொடர்பில் உள்ள தூதரகம், பாதிக்கப்பட்ட மாலுமிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது.

## நாகை மீன்வள பல்கலை.யில் சேர மே 15 முதல் விண்ணப்பிக்கலாம்

நாகப்பட்டினம்:மே.11-

நாகை தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தில் 202627 இளநிலைப் பட்டப் படிப்பு சேர்க்கைக்கு மே15 முதல் இணைய வழியில் விண்ணப்பிக்கலாம் என துணைவேந்தர் பெலிக்ஸ் தெரிவித்துள்ளார்.




இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் 10 உறுப்பு கல்லூரிகள் மற்றும் ஒரு இணைப்பு தனியார் கல்லூரி மூலம் 8 இளநிலைப் படிப்புகள், 5 தொழில்முறை மற்றும் 3 துணைத் தொழில்முறை படிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.மேலும், இந்த கல்வியாண்டில் உறுப்பு கல்லூரிகளில் 416 மாணவர்களும், இணைப்பு தனியார் கல்லூரியில் 60 மாணவர்களும் சேர்க்கப்பட உள்ளனர். மீனவர் சமூக ஒதுக்கீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்ட இடங்களில் 5 சதவீதம் சேர்க்கை பெறும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை மீனவர் நல வாரியம் ஏற்கும். www.admission.tnfu.ac.in என்ற இணையதளத்தில் மே 15 முதல் ஜூன் 14ம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பக் கட்டணம் எஸ்சி,எஸ்சிஏ, எஸ்.டி மாணவர்களுக்கு ரூ.250, பிற பிரிவினருக்கு ரூ.500. மேல்நிலைத் தேர்வில் பெற்ற கட் ஆஃப் மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும். கலந்தாய்வு இணைய வழியில் நடைபெறும். சிறப்பு பிரிவினர்களுக்கான கலந்தாய்வு நேரடியாக நடைபெறும். அதன் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

## பிளஸ் 1 தொழிற்கல்வி திறன் பயிற்சி தள்ளிவைப்பு

சென்னை:மே.11-

பிளஸ் 1 தொழிற்கல்வி மாணவர்களுக்கான திறன் பயிற்சி நாளை நடைபெற இருந்த நிலையில், நிர்வாக காரணங்களால் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குநரகம் சார்பில் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: அரசு மேல்நிலை பள்ளிகளில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் பிளஸ் 1 பயிலும் மாணவர்களுக்கு 2ம் கட்ட திறன் பயிற்சி நாளை வழங்க திட்டமிடப்பட்டிருந்தது. அவை நிர்வாக காரணங்களால் தள்ளிவைக்கப்படுகிறது. பள்ளி திறந்த பின்னர் பயிற்சி நடைபெறும். இதற்கான நாள் பின்னர் தெரிவிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நவீன தொழில்நுட்பத்துடன் புராணக் கதை ‘தி ஒடிஸி’ பற்றி கிறிஸ்டோபர் நோலன் தகவல்






பிரபல ஹாலிவுட் இயக்குநர் கிறிஸ்டோபர் நோலன், 7 ஆஸ்கர் விருதுகளை அள்ளிய ‘ஓபன்ஹெய்மர்’ படத்துக்குப் பிறகு இயக்கியுள்ள திரைப்படம் ‘தி ஒடிஸி’.

ஹோமரின் புகழ்பெற்ற கிரேக்கக் காவியமான ‘தி ஒடிஸி’யை மையமாகக் கொண்டு உருவாகி இருக்கும் இப்படத்துக்கு உலக அளவில் எதிர்பார்ப்பு உள்ளது. முதன்முறையாக, முழு திரைப்படமும் ஐமேக்ஸ் கேமராவால் படமாக்கப்பட்டுள்ள இப்படத்தில், மேட் டாமன், டாம் ஹாலண்ட், ஆன் ஹாத்வே, ஜெண்டயா, லூபிடா நியாங்கோ, ராபர்ட் பாட்டின்சன், சார்லிஸ் தெரோன் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

ஜூலை 17ம் தேதி வெளியாக இருக்கும் இப்படம் பற்றி கிறிஸ்டோபர் நோலன் கூறும்போது, “ஒரு புகழ்பெற்ற கதையைத் திரையில் கொண்டு வரும்போது மிகப்பெரிய பொறுப்புணர்வு ஏற்படுகிறது. மக்கள் நேர்மையான மற்றும் வலிமையான படைப்பையே எதிர்பார்க்கிறார்கள். அதற்காக ஒரு படைப்பாளி எவ்வளவு தூரம் மெனக்கெடுகிறார் என்பதுதான் முக்கியம். ‘திடார்க் நைட்’ வரிசைப் படங்களில் நான் கற்றுக் கொண்ட பாடம் இது.

புராண காலத்து அரக்கர்களையும், அதிசய உயிரினங்களையும் ஹாலிவுட் படங்களில் உயிர்ப்பித்த ரே ஹாரிஹவுசன் போன்ற மேதைகளின் படங்களைப் பார்த்து வளர்ந்த எனக்கு, அதே போன்ற பிரம்மாண்டமான புராணக் கதையை நவீன தொழில்நுட்பத்துடன் சொல்ல வேண்டும் என்பது நீண்ட கால ஆசை. அது இதில் நிறைவேறியிருக்கிறது. ‘ஓபன்ஹெய்மர்’ படத்தின் நீளத்தை விட இது குறைவுதான் ” என்றார்.

# தயாரிப்பு நிறுவனம் தொடங்கியது ஏன்? ‘29’ விழாவில் லோகேஷ் கனகராஜ் விளக்கம்



‘மேயாதமான்’, ‘ஆடை’, ‘குலுகுலு’ ஆகிய படங்களை இயக்கிய ரத்னகுமார் இயக்கியுள்ள ‘29’ என்ற படத்தில் விது, ப்ரீத்தி அஸ்ராணி, மகேந்திரன், அவினாஷ், ஷெகனாஸ் ஃபாத்திமா, பிரேம் குமார் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். கார்த்திகேயன் சந்தானம், கார்த்திக் சுப்புராஜ், லோகேஷ் கனகராஜ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்தை ஒயிட் கார்பெட் பிலிம்ஸ் மே 8ம் தேதி வெளியிடுகிறது.

இதன் செய்தியாளர்கள் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது. இயக்குநர்கள் பி.எஸ்.வினோத் ராஜ், கார்த்திக் யோகி, அருண் மாதேஸ்வரன், தயாரிப்பாளர்கள் அருண் விஷ்வா, ராஜசேகர பாண்டியன், மகேஷ் ராஜ் பஸ்லியான், நடிகர் ஆர்ஜே பாலாஜி, ரியோ ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இயக்குநர் லோகேஷ் கனகராஜ் பேசும்போது, “இந்தப் படத்தைத் தயாரிப்பதற்கு முழு காரணம் ரத்னகுமார்தான். 2013ம் ஆண்டில் முதல் படத்தை இயக்குவதற்காக அலைந்து கொண்டிருந்த போது, இங்கு இப்போது இருக்கும் எல்லா இயக்குநர்களும் ஒன்றாகத் தான் சுற்றிக் கொண்டிருந்தோம். 2012ம் ஆண்டில் வெளியான ‘பீட்சா’ படம்தான் எங்கள் கனவுகளுக்கு மிகப்பெரிய கதவைத் திறந்து வைத்தது.

ரத்னகுமார் இயக்கியுள்ள இப்படத்துக்கு ஸ்டோன் பெஞ்ச் நிறுவனத்துடன் இணைந்து நானும் தயாரிப்பாளராகப் பொறுப்பேற்று இருக்கிறேன். நான் தயாரிப்பு நிறுவனம் தொடங்க காரணம், நாம் வளரும்போது நம்முடன் இருந்தவர்களையும் வளர்த்து விட வேண்டும் என்பதற்காகத் தான். இதற்கு இன்ஸ்பிரேஷன் கமல் சார். சினிமாவில் சம்பாதித்ததை சினிமாவில் தான் முதலீடு செய்ய வேண்டும் என்பதை அவர்தான் சொல்லிக் கொடுத்தார். நான் இதுவரை இந்தப் படத்தைப் பார்க்கவும் இல்லை. கதையை கேட்கவும் இல்லை. ரத்னகுமார் மீது வைத்திருக்கும் நம்பிக்கைதான் காரணம்” என்றார்.

# தனுஷ் படம் தாமதம்: ‘வாழை’ இரண்டாம் பாகத்தைத் தொடங்குகிறார் மாரி செல்வராஜ்

தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குநர்களில் ஒருவரான மாரி செல்வராஜ், நடிகர் தனுஷுடன் இணையவிருந்த ‘தனுஷ் 56’ திரைப்படம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ள சூழலில், தனது வெற்றிப்படமான ‘வாழை’ படத்தின் இரண்டாம் பாகத்திற்கான பணிகளை தீவிரப்படுத்தியுள்ளார் என்ற தகவல் வெளியாகி உள்ளது.


மாரி செல்வராஜ் இயக்கத்தில் கடந்த 2025 ஆம் ஆண்டு தீபாவளிக்கு வெளியான ‘பைசன்’ திரைப்படம், துருவ் விக்ரம், அமீர், லால் ஆகியோரின் நடிப்பில் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் மாபெரும் வெற்றி பெற்றது. ஓடிடி தளங்களிலும் உலகளாவிய வரவேற்பைப் பெற்ற இப்படம், தேசிய விருதுப் பட்டியலிலும் இடம்பெறும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதைத் தொடர்ந்து, மாரி செல்வராஜ் நடிகர் தனுஷை வைத்து தனுஷ் 56 என்ற படத்தை இயக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால், தனுஷ் தற்போது ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் தனது 55வது படத்தில் பிஸியாக நடித்து வருகிறார். இந்தப் படத்தை தனுஷே தயாரித்து வருவதால், திட்டமிட்ட காலத்தைவிட படப்பிடிப்பு கூடுதல் நாட்களை எடுத்துக் கொள்கிறது. மேலும், தனுஷ் அடுத்ததாக மீண்டும் ஒரு படத்தை இயக்கவும் திட்டமிட்டுள்ளார். இதன் காரணமாக ‘தனுஷ் 56’ படத்தின் படப்பிடிப்பு இன்னும் சில மாதங்கள் தாமதமாகும் எனத் தெரிகிறது. வாழை: இந்த இடைப்பட்ட காலத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ள விரும்பும் மாரி செல்வராஜ், தனது இயக்கம் மற்றும் தயாரிப்பில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற படைப்பான ‘வாழை’ படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கத் தயாராகிவிட்டார். இப்படத்தில் ‘பரியேறும் பெருமாள்’ படத்திற்குப் பிறகு நடிகர் கதிர் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இவருடன் முதலாம் பாகத்தில் நடித்த நிகிலா விமல் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார் என்றும் கூறப்படுகிறது. இவர்களுடன் பிரியங்கா மோகன் மற்றும் காயடு லோகர் என இரண்டு கதாநாயகிகள் இப்படத்தில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நெட்ஃபிளிக்ஸ்: நெட்ஃபிளிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கப்படவுள்ள இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கவுள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்பை விரைந்து முடித்து, 2026 இறுதி அல்லது 2027 தொடக்கத்தில் வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது. மாரி செல்வராஜின் இந்த அடுத்தடுத்த அதிரடி முடிவுகள் சினிமா வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.





# ‘சத்தியவான் சாவித்திரி’யில் நீதிமன்றத்தில் நடக்கும் கதை

இயக்குநர் மிஷ்கின், கீர்த்தி சுரேஷ் இணைந்து நடிக்கும் படம், ‘சத்தியவான் சாவித்திரி’. பிரவீன் எஸ் விஜய் இயக்கும் இதில் சாருகேஷ், பாலசரவணன், மதுசூதனன், சுந்தர்ராஜன், ஷில்பா மஞ்சுநாத், பிரிகிடா, மாலா பார்வதி, தீபா, ஏ.வெங்கடேஷ், பாண்டியன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

ஜீ ஸ்டூடியோஸ் மற்றும் டிரஸ்டிக் புரொடக் ஷன்ஸ் சார்பில் வெடிக்காரன்பட்டி எஸ்.சக்திவேல், உமேஷ் குமார் பன்சால் தயாரிக்கின்றனர். இதன் ஃபர்ஸ்ட் லுக் வெளியாகியுள்ளது.

“சராசரி பெண்ணான கீர்த்தி சுரேஷ் அவரது சீனியர், ஒரு வழக்கில் தவறான பக்கம் வாதாடும் போது, அதை அவருக்கு உணர்த்த முற்படுகிறார். அப்போதுதான் சீனியரின் அசல் முகம் வெளிப்படுகிறது.

அந்த வழக்கு கீர்த்தியின் வாழ்வை புரட்டிப் போடும் விதமாக இருக்கிறது. அதிலிருந்து அவர் மீண்டாரா என்பது கதை. நீதிமன்றத்தில் நடக்கும் ஒரு வழக்கை மையமாக வைத்து, கமர்ஷியல் அம்சங்களுடன் இப்படம் உருவாகி இருக்கிறது” என்றது படக்குழு.




# நடிகர் துல்கர் சல்மானுக்காக தான் சினிமாவுக்கு வந்தேன்: ஃபரியா அப்துல்லா

தெலுங்கில் கடந்த 2021ம் ஆண்டு வெளியான ‘ஜாதி ரத்னலு’ என்ற படம் மூலம் நடிகையாக அறிமுகமானவர் ஃபரியா அப்துல்லா. தொடர்ந்து தெலுங்கில் மட்டுமே நடித்து வந்த அவர் தற்போது தமிழில் விஜய் ஆண்டனியுடன் ‘வள்ளி மயில்’ என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்நிலையில் படவிழா ஒன்றில் துல்கர் சல்மானுடன் கலந்துகொண்ட ஃபரியா அப்துல்லா பேசுகையில், ‘‘நான் முதன் முதலாக துல்கர் சல்மான் படம் என பார்த்தது ‘சார்லி’ தான். அப்படத்தில் ஹீரோயினாக நான் என்னையே நினைத்துக் கொண்டேன். அதன்பிறகு சினிமா துறையில் நுழைந்து எப்படியாவது அவரை பார்த்துவிட வேண்டும் என்று நினைத்தேன். எனது முதல் படமான ‘ஜாதி ரத்னலு’ வெளியானபோது அதன் டீசரை துல்கர் சல்மானுக்கு டேக் செய்தேன். அவர் அதற்கு பதிலளித்தார். அந்த சந்தோஷத்தில் எனது மொபல் போனை மேலே தூக்கி போட்டேன். இப்போது அவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளும் நிகழ்ச்சியில் அவருடன் நானும் சேர்ந்து பங்கேற்று இருப்பதை என்னால் நம்பவே முடியவில்லை’’ என்று கூறியுள்ளார்.




# லைவ் சவுண்டுடன் உருவான ‘பிரவுன் மணி’

ராம் நிஷாந்த், ஜேஎஸ் கவி முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள திரைப்படம் ‘பிரவுன் மணி’. ரிவர் ரூட் ஸ்டூடியோஸ் மற்றும் ரெட் ராக் ஸ்டூடியோஸ் இணைந்து வழங்கும் இப்படத்துக்கு தேவ் பிரகாஷ் ரீகன் இசையமைத்துள்ளார். சக்தி சுப்ரமணியன் ஒளிப்பதிவு செய்துள்ளார். இதன் டைட்டில் மற்றும் முதல் தோற்ற போஸ்டர் நேற்று வெளியிடப்பட்டது. இப்படத்தை ரியோ ராஜ், ரமேஷ் தயாரித்துள்ளனர். கவின் ஜிடி இணை தயாரிப்பு செய்துள்ளார்.

“குடும்பம், நண்பர்கள் உறவை மையமாகக் கொண்ட இந்தப் படம், 2 நண்பர்களின் உணர்ச்சி, பொழுதுபோக்கு நிறைந்த பயணத்தைச் சுவாரஸ்யமாகச் சொல்லும் கதையை கொண்டது. லைவ் சவுண்டுடன் உருவாகியுள்ள இப்படம், சவுண்ட்ஹாலிக் குழுவின் ஒலித் தொழில்நுட்ப வடிவமைப்பில், இயல்பான, ஆழமான ஒலி அனுபவத்தை வழங்கும். தற்போது படப்பிடிப்பு நிறைவடைந்து, போஸ்ட் புரொடக் ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன” என்று படக்குழு தெரிவித்துள்ளது.

# விசித்திர விளையாட்டை மையப்படுத்திய ‘டே 11’



இயக்குநர் பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய ஸ்ரீதிகா, பி.ஆர்.ஜி ஜெகந்நாதன் பிக்சர்ஸ் சார்பில் தயாரித்து இயக்கியுள்ள திரைப்படம் ‘டே 11’. இதில் புதுமுகங்கள் ஆதர்ஷ், மனோஜ் நாயகர்களாகவும் ஸ்வேதா அபிராமி நாயகியாகவும் நடித்துள்ளனர்.

ரவிச்சந்திரன், அபிமன்யு, தமிழ் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். அனில் இசையமைத்துள்ள இப்படத்துக்குச் செல்வா ஒளிப்பதிவு செய்துள்ளார்.

படம் பற்றி ஸ்ரீதிகா கூறும்போது, “இது சஸ்பென்ஸ் த்ரில்லர் திரைப்படம். ஒரு பெண் உள்பட 5 தோழர்கள் ஒரு விசித்திர விளையாட்டை விளையாடுவதற்குக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். விளையாட்டில் தோழி இறந்து விடுகிறார். அவர் வந்தால்தான் விளையாட்டை முடிக்க முடியும்.

வந்தாரா, இல்லையா? என்பதுதான் கதை. 11 நாட்களில் நடக்கும் விஷயங்கள்தான் கதை என்பதால் அதையே தலைப்பாக வைத்துள்ளோம். தமிழ் சினிமாவில் இதுவரை சொல்லப்படாத கதையை இதில் கூறியிருக்கிறோம். ஊட்டி, கொடைக்கானல், இமயமலை பகுதிகளில் படமாக்கி இருக்கிறோம். விரைவில் திரையரங்குகளில் வெளியாகும்” என்றார்.

# ஒரே வாரத்தில் ரூ.11 கோடி சம்பாதித்த நடிகை...எப்படி தெரியுமா?



அமெரிக்கன் பை படத்தில் நடித்த ஷானன் எலிசபெத் ஒன்லி பேன்ஸ் கணக்கை தொடங்கி உள்ளார். தமிழ் திரை உலக பிரபலங்களான தர்ஷா குப்தா, அபிராமி வெங்கடாசலம் உள்பட பலர் சமீபத்தில் சந்தா சேவையை தொடங்கி வருமானத்தை பெருக்கி வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த 16ம் தேதி தனது கணக்கை தொடங்கிய ஷானன் எலிசபெத் ஒரு வாரத்தில் ரூ.11 கோடி வருமானத்தை பெற்றுள்ளார். ஹாலிவுட் திரை உலகில் 2000ம் ஆண்டுல் பிரபல கவர்ச்சி நடிகையாக இருந்த ஷானன் எலிசபெத் கூறும்போது, ஹாலிவுட் படங்களின் கட்டுப்பாடு என்னை சலிப்படைய செய்துள்ளது.

ஒன்லி பேன்ஸ் தளம் இதுவரை பார்த்திராத ஒரு கவர்ச்சியாக பக்கத்தை வெளிப்படுத்தவும், ரசிகர்களுடன் நெருக்கமாக இருக்கவும் உதவுகிறது. என் விருப்பப்படி கருத்துக்களை உருவாக்கவும், சுதந்திரமாகவும் இருக்கவும் அனுமதிக்கிறது. இதுவே என் எதிர்காலம் என நான் உறுதியாக நம்புகிறேன் என்றார்.



■ சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் (10.05.2026) மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக ச.ஜோசப் விஜய்க்கு பதவி பிரமாணம் செய்து வைக்கும் நிகழ்ச்சி, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள்தொடர்புத்துறை அதி நவீன எல்.இ.டி. வாகனம் மூலம் நேரடி ஒளிப்பரப்பு செய்யப்பட்டதை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## தேனி மாவட்டம்தனியார் பள்ளி வாகனங்களை கூட்டாய்வு செய்யும் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தேனி மே.11-

தேனி மாவட்டம், ஆயுதப்படை மைதானத்தில் தேனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட தனியார் பள்ளிகளின் வாகனங்களை ஆய்வு செய்யும் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தேனி மாவட்ட நிர்வாகம், காவல்துறை, பள்ளிக்கல்வித்துறை, தீயணைப்புத்துறை, வட்டார போக்குவரத்து அலுவலகம் இணைந்து தேனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட (தேனி, பெரியகுளம், ஆண்டிபட்டி வட்டம்) 47 பள்ளிகளில் உள்ள 380 வாகனங்களில் 297 பள்ளி வாகனங்களைக் கூட்டாய்வு செய்யும் பணிகள் இன்று நடைபெற்றது. வ்வாய்வின்போது, பள்ளி வாகனத்தில் அவசர கால வழி (Emergency Exit Door), முதலுதவிப்பெட்டி, ஏறி இறங்கும் படிக்கட்டுகள், தீயணைப்பான் கருவி, வாகனத்தின் தரை பலகை (Plot form), கண்காணிப்புக் கேமரா உள்புறம் மற்றும்



வெளிப்புறம், அவசர கால தொலைப்பேசி எண்கள் ஆகியன முறையாக உள்ளதா என்றும் மேலும், வேக கட்டுப்பாட்டுக்கருவி வாகனத்தின் பிரேக்கின் திறன் போன்றவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பள்ளி வாகன ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களிடம் தெரிவித்ததாவது, ஆண்டுக்கு ஒருமுறை பள்ளி மாணவர்களை அழைத்து செல்லும் வாகனங்களை கூட்டாய்வு மூலம் ஆய்வு செய்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு உத்தரவிட்டதன் அடிப்படையில், இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி வாகன ஓட்டுநர்கள் சீருடை அணிந்திருக்க வேண்டும். பள்ளிவாகனத்தில் ஒரு உதவியாளர் இருக்க வேண்டும். வாகனத்தின் பின்புறம் பள்ளி நிர்வாகத்தின் தொலைப்பேசி எண், வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தின் தொலைப்பேசி எண், காவல் நிலைய தொலைப்பேசி எண், குழந்தைகள் பாதுகாப்பு எண் உள்ளிட்டவை நன்றாக தெரியும் வகையில் எழுதப்பட வேண்டும். வாகனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குறைபாடுகளை சரிசெய்து மீண்டும ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஒரு வாகனத்தின் திறன் எவ்வாறு முழுமையாக உள்ளதோ அதேபோன்று வாகன ஓட்டுநர்களும் முழுமையான உடல் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். அதன்படி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, வாகன ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்கள் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், கண் பரிசோதனை மேற்கொண்டு, மருத்துவரின் அறிவுரையை பின்பற்றி முறையாக மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும். முறையாக மருத்துவ பரிசோதனைகளை தொடர்ந்து மேற்கொண்டு, உடலை பேணிப் பாதுகாத்து கொள்ள வேண்டும். மிழ்நாடு அரசு விதித்துள்ள வழிமுறைகளையும், சாலைப் பாதுகாப்பு விதிகளையும், முறையாக பின்பற்றி வாகனங்களை இயக்க வேண்டும். பள்ளி மாணவர்களை ஏற்றி செல்வதால் வாகனங்கள் இயக்குவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று ஆய்வுக்கு வராத வாகனங்களை பள்ளி திறப்பதற்கு முன்பாக, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வுக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். இன்றையதினம் ஆய்வு செய்யப்பட்ட 297 வாகனங்களில் சிறுசிறு குறைபாடுகள் கொண்ட 18 வாகனங்கள் கண்டறியப்பட்டு, குறைகளை நிவர்த்தி செய்து மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்த அறிவுறுத்தப்பட்டது. 279 வாகனங்கள் தகுதியானவையாக கருதப்பட்டு தொடர்ந்து பள்ளி குழந்தைகளை ஏற்றி இறக்கஅனுமதிக்கப் பட்டது. மீதமுள்ள வாகனங்களும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வுக்கு உட்படுத்தபபப்பட்ட பின்னரே பள்ளி குழந்தைகளை ஏற்றி இறக்க அனுமதிக்கப்படும்.

மேலும், உத்தமபாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்குட்பட்ட (உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் வட்டம்) 287 பள்ளி வாகனங்கள் வருகின்ற 14.05.2026 அன்று கூட்டாய்வு செய்யும் பணிகள் நடைபெற உள்ளது. இவ்வாய்வில், பெரியகுளம் சார் ஆட்சியர்.ரஜத்பீடன், வட்டார போக்குவரத்து அலுவலர் மாணிக்கம், முதன்மைக் கல்வி அலுவலர் .நாகேந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர் சுந்தர் ராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## கலைவாணி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே.11-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி கலைவாணி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பொது தேர்வில் மொத்தம் 42 மாணவமாணவிகள் தேர்வு எழுதி அனைவரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். முதலிடம் ஆர்.ஹரிணி 562 மதிப்பெண்களும், எஸ்.ரஞ்ஜினி 546 மதிப்பெண்களும், மூன்றாமிடம் யு.கோகுல லட்சுமி 540 மதிபெண்களும் பெற்றுள்ளனர்.12ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவமாணவிகளையும் பள்ளியின் தாளாளர் கணேசன், செயலாளர் தேவசுதா, முதல்வர் கலைவாணி உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்தினர்.



## பம்மதுகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு பொதுதேர்வில் 86 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே 11-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பம்மதுகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 84 மாணவர்கள் தேர்வு எழுதினர். அதில் 86 சதவீதம் பெற்று 72 மாணவர்கள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.

524 மதிப்பெண்கள் பெற்று பி.சந்தியா முதலிடமும், 517 மதிப்பெண்கள் பெற்று என்.யுகராஜ் இரண்டாமிடமும், 512 மதிப்பெண்கள் பெற்று ஹெச்.சரண்யா மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் புஷ்பலதா, உதவி தலைமை ஆசிரியர் பி.வி. தேவராஜுலு மற்றும் பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள் வாழ்த்தினார்.



## ஆற்காட்டில் த வெ க தொண்டர்கள் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

ராணிப்பேட்டை மே_11-

தமிழ்நாடு முதலமைச்சராக தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பதவியேற்றதை தொடர்ந்து ஆற்காடு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆற்காடு நகரம் மற்றும் தாஜ்புரா பஞ்சாயத்து பெரியார் நகர், சத்யா நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தமிழக வெற்றி கழக தொண்டர்கள் மேளதால வாத்தியங்கள் முழங்க பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி ஆடிபாடி உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர், தமிழ்நாடு முதலமைச்சராக தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பதவியேற்றதை தொடர்ந்து ஆற்காடு சட்டமன்றத் தொகுதி முழுவதும் உள்ள தமிழக வெற்றி கழக தொண்டர்கள் உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## சென்னை: வங்கியில் போலி நகையை அடகு வைத்த 2 பேர் கைது

சென்னை.மே.11-

சென்னையை அடுத்த திருமுல்லை வாயல், செந்தில் நகர் பகுதியைச் சேர்ந்தவர் குமரன் (27). இவர், சென்னை, கெல்லீஸ் பகுதியில் உள்ள வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறார்.இந்நிலையில், நேற்று முன்தினம் வங்கிக்கு வந்த இரு நபர்கள் 15.4 கிராம் எடையுள்ள தங்க நகைகளை அடகு வைக்க கொடுத்தனர். அந்த நகைகளை மதிப்பீட்டாளர் குமரன் தீவிரமாகச் சோதனை செய்தபோது, அவை உண்மையான தங்கம் அல்ல என்பதும், செம்பு உள்ளிட்ட உலோகங்களின் மீது தங்க மூலம் பூசப்பட்ட போலி நகைகள் என்பதும் தெரியவந்தது.இதையடுத்து, உடனடியாக தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலையத்தின் குற்றப்பிரிவில் புகார் அளித்தார். புகாரின் பேரில் காவல்துறையினர், வங்கிக்கு விரைந்து வந்து மோசடியில் ஈடுபட முயன்ற 2 பேரையும் கைது செய்தனர்.




அதில் அவர்கள் சென்னை கொண்டித்தோப்பை சேர்ந்த ராஜேஸ் திவார் சோனி (54) மற்றும் புளியந்தோப்பை சேர்ந்த தமிழ்ச் செல்வன் (48) என்பது தெரிய வந்தது. இவர்கள் இருவரும் ஏற்கனவே இதே பாணியில் பல்வேறு வங்கிகளில் போலி நகைகளை அடகு வைத்து பல லட்சம் ரூபாய் மோசடி செய்திருப்பது தெரியவந்தது

## சட்டப்பேரவைத் தேர்தலில் 4023 வேட்பாளர்களில் 3352 பேர் டெபாசிட் இழப்பு

சென்னை: மே.11-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 72 மணி நேரத்தில் தேர்தல் தொடர்பான புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, தமிழகத்தில் 86 சதவீத வாக்குகள் பதிவாகியிருப்பது தெரியவந்துள்ளது.இதுதொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழகம் உள்ளிட்ட 5 மாநிலத் தேர்தல் தொடர்பான புள்ளிவிவரங்கள், தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட 72 மணி நேரத்துக்குள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த புள்ளிவிவர அறிக்கைகளை டிஜிட்டல் முறையில் விரைவாகப் புதுப்பித்து வெளியிடுவது என்பது, கடந்த ஓராண்டில் ஆணையம் மேற்கொண்ட 30க்கும் மேற்பட்ட முயற்சிகளில் ஒன்றாகும். இசிஜநெட் (ECINET) செயலி அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பு, இந்த தரவுகளை கள அலுவலர்கள் கையால் பூர்த்தி செய்து வந்ததால், இந்த செயல் முறைக்கு பல வாரங்கள் முதல் மாதங்கள் வரை




ஆனது.தற்போது வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்தில் வேட்பாளர்கள், வாக்காளர்கள், பதிவான வாக்குகள், எண்ணப்பட்ட வாக்குகள், கட்சி வாரியாக மற்றும் வேட்பாளர் வாரியாக பதிவான வாக்குகள் என 14 வகையான தரவுகள் உள்ளன. இதை இசிஜநெட் செயலி மற்றும் இணையதளம் (https://www.eci.gov.in/statistical-reports) மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 72 மணி நேரத்துக்குள் புள்ளிவிவர அறிக்கைகள் வெளியிடப்படுவது இதுவே முதல்முறை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.தேர்தல் ஆணையம் வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, தமிழகத்தில் 5,74,11,793 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 4,93,89,958 பேர் வாக்களித்துள்ளனர். இதில், தபால் மூலம் மட்டும் 5,86,954 பேர் வாக்களித்த நிலையில், அவற்றில் 65,047 பேரின் தபால் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. சட்டப்பேரவைத் தேர்தலில் 4023 வேட்பாளர்களில் 3352 பேர் டெபாசிட் இழந்துள்ளனர். நோட்டாவுக்கு 1,99,805 பேர் வாக்களித்துள்ளனர். செல்லத்தக்கதாக 4.91 கோடி வாக்குகள் பதிவாகியுள்ளன. வெளிநாடுகளில் 2,730 வாக்காளர்கள் உள்ள நிலையில், 16 பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தம் பதிவான வாக்குகள் 86.03 சதவீதமாக உயர்ந்துள்ளது.



## அலமாதி அரசு மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு பொதுதேர்வில் 90 சதவீதம் தேர்ச்சி 180 மாணவ மாணவிகள் தேர்ச்சி

மாதவரம், மே.11-

மாதவரம் தொகுதி பொன்னேரி கல்வி மாவட்டம் அலமாதி அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ஆம்வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 200 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர். இதில் 90 சதவீதம் பெற்று 180 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். முதல் இடம் வளர்மதி 531 மதிப்பெண்களும் இரண்டாம் இடம் நித்யா 523 மதிப்பெண்களும் மூன்றாம் இடம் ஆதிகேசவன் 518 மதிப்பெண்களும் பெற்று உள்ளனர். பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவிகளையும் பாராட்டி தலைமை ஆசிரியர் ஏகாம்பரம், உதவி தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மைக் குழுவினர் உள்ளிட்ட சக ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்தினர்.

## இலைக் கட்சி எம்எல்ஏக்களை 'இழுத்து வர' முடியுமா? உள்குத்து உளவாளி

சென்னை:மே.11-

"யாரிடமும் குதிரை பேரம் பேசவேண்டிய அவசியல் இல்லை" என்று விசில் பார்ட்டி விளக்கம் கொடுத்திருக்கும் நிலையில், விசில் பார்ட்டியை அதிகாரத்தில் அமர்த்த புதிதாய் புறப்பட்டு வந்திருக்கும் புரோக்கர்கள் பலர் பணத்தை மடியில் கட்டிவைத்துக் கொண்டு அலைகிறார்களாம்.




ஆட்சிக்கு ஆதரவுக் கரம் நீட்டிய கட்சி ஒன்றை '50 சி' வரை பேரம் பேசித்தான் வழிக்குக் கொண்டு வந்தார்களாம். அதேபோல், 'டுபாக்கூர்' லெட்டர் கொடுத்ததாக பரபரப்பு கிளப்பிய எம்எல்ஏவுக்கு '30 சி' வரைக்கும் கமுக்கமாக பேசி முடித்தார்களாம்.

இந்த விவகாரம் போலீஸ் விசாரணை வரை போயிருக்கும் நிலையில், ஆட்சி அமைக்கும் இந்த அரசியல் விளையாட்டு மைதானத்தில் அமலாக்கத் துறையை இறக்கிவிட்டு ஆட்டத்தை இன்னும் கொஞ்சம் சுவாரஸ்யமாக ஆடிப் பார்க்கலாமா என ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறதாம் டெல்லி.

பணப் புழக்கம் தொடர்பாக சூரியக் கட்சியின் 'மாப்பிள்ளை சாருக்கு' வேண்டப்பட்ட உளவாளிகளும் உன்னிப்பாக கவனித்து வருகிறார்களாம். இதனிடையே, ஆட்சி அமைக்கும் ஆட்டத்தில் இருந்து இலைக் கட்சி ஒதுங்கிவிட்டதால் அங்கே ஊசலாட்டத்தில் இருக்கும் எம்எல்ஏக்களை 'இழுத்து வர' முடியுமா என 'குலுக்கல் மாப்பிள்ளையின்' உறவுப் பெண்மணியிடம் உரிமையோடு நூல்விட்டுப் பார்த்தார்களாம். ஆனால், அதற்கு அவர் அசைந்து கொடுக்கவில்லையாம்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161